27 JUN 2008

நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண்.38279/தேர்./06 – 4 நாள் 25.06.2008.

அனுப்புநர்
திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையர்,
குறளகம், சென்னை – 600 108.(பெயரிட்ட உறையில்)
ஆணையர்,
சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003. (பெயரிட்ட உறையில்)

ADMA (V.P)

அய்யா,

பொருள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு – சொத்துவரி பொது சீராய்வு, 2008 – சில அறிவுரைகள் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை(நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.11.2007.
2. அரசு கடித எண்.38279/தேர்./06, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.02.2008.
3. அரசாணை(நிலை) எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.06.2008.

----

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகள் மற்றும் அரசு கடிதத்திற்கு தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், 01.04.2008 முதல் தொடங்கியுள்ள அரையாண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக பார்வை 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசு கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளில், சொத்துவரி நிர்ணயம் செய்யப்படுவதெற்கென, நகரங்கள், மண்டலங்களாக பிரிக்கப்படுதல், ஒவ்வொரு மண்டலத்திலும் இடம் பெற்றுள்ள தெருக்கள், சொத்துக்கள் ஆகியவற்றை விளக்கிக் காட்டும் வரைபடம் ஒன்று அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட நகரம், மண்டலங்களாக பிரிக்கப்பட்டது தொடர்பான விவரங்கள், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படவேண்டுமெனவும் அனைத்து விவரங்களும் பொதுமக்களை சென்றடையும் வகையில் பரவலாக விளம்பரப்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பின் இணைய தளத்தில் வெளியிடப்படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், சொத்துவரி மதிப்பீட்டு படிவங்களை, எவ்வித சிரமமுமின்றி எளிதாக நிறைவு செய்வதற்கென தேவைப்படும் அனைத்து விவரங்களும் பொதுமக்களை எளிதாக சென்றடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி படிவங்களை நிறைவு செய்ய தேவைப்படும் அனைத்து உதவிகளையும் அளிக்க வேண்டுமெனவும் தங்களுக்குத் தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசுச் செயலாளருக்காக.